I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.156/2019

**Name** : Nakkeeran
**Father/Husband Name** : கோபாலகிருஷ்ணன்
**Age** : 76

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2026**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 11.55 a.m

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

என் சொந்த ஊர் அமனாங்குப்பம். நான் பிறந்ததில் இருந்து அங்கு தான் வசிக்கிறேன். இந்த வழக்கு போட்டுள்ள சொத்து எனக்கு பூர்வீக சொத்தாகும். 23.10.1982 தேதியிட்ட பத்திரம் என்ன என்றால் பாகப் பிரிவினை பத்திரம். இந்த பாகப் பிரிவினை பத்திரத்திரம் நான் என் அண்ணன் இருவருக்கும் சம்மந்தப்பட்டவை. இதில் எந்த அட்டவணை சொத்து எனக்கு வந்துள்ளது என்றால் D அட்டவணை சொத்து.

D அட்டவணை சொத்தில தான் நான் வாதிக்கு விற்றேனா என்றால் விற்கவில்லை அடமானம் வைத்தேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். எனக்கு 2 ஆண் பிள்ளைகள் 1 பெண். அவர்கள் பெயர் பாரி, குமணன், உமா.

பாரி 10 ம் வகுப்பு படித்திருக்கிறார். குமணன் 8 ம் வகுப்பு படித்திருக்கிறார். உமா 8 ம் வகுப்பு படித்திருக்கிறார். பாரி என்பவர் சுற்றுவட்டத்தில் Electrician வேலை செய்கிறார். குமணன் விளம்பர பலகை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதுவார். நாங்கள் அனைவரும் ஒன்றாக தான் வசிக்கிறோம். என் மகள் திருமணமாகி இரத்தினகிரியில் இருக்கிறார்.

வா.சா.ஆ.2 இருக்கும் முதல் சாட்சியில் கையெழுத்து போட்டது என் மகன் பாரி என்பது சரிதான். அந்த கையெழுத்து மட்டும் பி.சா.ஆ.1. குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து போட்டார். அவர் கையெழுத்து போட்ட தேதி 21.03.2012 என்றால் சரிதான். பழைய கதவு எண்.1/35, புதிய எண்.1/48, பஜனை கோயில் தெரு, அமனாங்குப்பம் கிராமம், காட்பாடி தாலுக்கா என்ற விலாசத்தில் வசித்த போது தான் வா.சா.ஆ.2 எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் எல்லா பக்கங்களிலும் உள்ள நக்கீரன் என்ற கையெழுத்துக்கள் என்னுடையது தான். அவைகள் பி.சா.ஆ.2 தொடர்ச்சி (19 எண்ணிக்கை). கையெழுத்துக்கள் அனைத்தும் 21.03.2012 ல் குடியாத்தம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அவர் முன்பாக போடப்பட்டது என்றால் சரிதான்.

நான் கையெழுத்து போட்ட பிறகு தான் பிரதிவாதிகள் மூவரும் கையெழுத்து போட்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் ஒட்டப்பட்டுள்ள என் போட்டோவை கொடுத்தது நான் தான். அன்றைய தேதி 21.03.2012 அன்று தான் அந்த சாட்சிகள் மதன்லால், மற்றும் கார்த்திகேயன் ஆகியோர்கள் சார்பதிவாளர் அலுவலகத்தின் முன்பாக கையெழுத்து போட்டார்கள் என்றால் சரிதான்.

4 வது பக்கத்தில் உள்ள மதன்லால் கையெழுத்து பி.சா.ஆ.3 மற்றும் கார்த்திகேயன் கையெழுத்து **பி.சா.ஆ.4.** அதே ஆவணத்தில் கடைசி பக்கத்தில் மதன்லால் கையெழுத்து **பி.சா.ஆ.5** மற்றும் கார்த்திகேயன் கையெழுத்து **பி.சா.ஆ 6.** இந்த கையெழுத்துக்கள் 2012 ல் போட்ட பிறகு குடியாத்தம் sub registrar நான் செல்லவில்லை. இந்த 21.03.2012 க்கு பிறகு சுமார் 7 வருடங்களுக்கு பிறகு தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

என் வழக்கில் ஏன் இந்த 7 வருட காலம் வழக்கு தாக்கல் செய்யவில்லையென்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் வீட்டிற்கும்

அமனாங்குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும், எவ்வளவு கி.மீ இருக்கும் என்றால் 3 கி.மீ. சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் குடியாத்தம் நீதிமன்றத்திற்கும் இடையில் சுமார் 3 கி.மீ. அந்த வழியாக தான் நான் Regular ஆக போய் வருவேன் என்றால் சரிதான். கார்த்திகேயனை எப்படி தெரியும் என்றால் என் சகலபாடி என்றார். அவர் சென்னையில் இருக்கிறார். அவரும் Electrician. சகலபாடி மூலம் தான் பிரதிவாதிகள் அறிமுகம் ஆனார்கள் என்றால் சரிதான்.

21.03.2012 முன்பாக சுமார் 2 மாதங்களுக்கு முன்பு எனக்கு அறிமுகம் ஆனார்கள். இந்த பாகப்பிரிவினை மூலமாக இந்த சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்று நானும் என் சகலபாடியும் கூறி தான் பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றால் சரிதான். சென்னையில் உள்ள பூக்கடையில் சென்று என் சகலபாடியும் பிரதிவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். நான் அன்றைக்கு பூக்கடைக்கு போகவில்லை.

நான் சகலபாடியிடம் பேச்சுவார்த்தை செய்வதற்காக பொறுப்பை ஒப்படைத்துவிட்டேன். ஜனவரி 2012ல் இருந்து 21.03.2012 பத்திரம் பதிவு செய்யும் வரை அவரும் உடனிருந்து பத்திரம் பதிவு செய்து முடித்தார் என்றால் சரிதான். என் மச்சினிச்சி மற்றும் சகலபாடியுடன் இன்று வரை நல்ல பேச்சுவார்த்தையில் தான் இருக்கிறேன்.

இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் என் சகலபாடிக்கும் தெரியும், மற்றும் என் மச்சினிச்சிக்கும் தெரியும். வா.சா.ஆ.2 சம்மந்தமாக சுமார் 7 வருடங்கள் கழித்து முதன் முதலாக பிரதிவாதிகளுக்கு ஓர் அறிவிப்பு வா.சா.ஆ.3 கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் ரூபாய்.15,30,000/- நான் திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2012லிருந்து இந்த வழக்கு தவிர்த்து வேறு ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

ரூபாய்.15,30,000/– 2019ல் வழக்கு தாக்கல் செய்த போது Deposit செய்தேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிகளிடம் பணம் ரூபாய்.15,27,600/– வாங்கிய போது HDFC Bank சென்னை– 84 காசோலை மூலம் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த காசோலையை என் வங்கி கணக்கில் போட்டு பணம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு பணம் பெற்றதற்கான எனது வங்கி கணக்கு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். இந்த பணம் வாங்கிய விவரம் என் குடும்பத்தார் அனைவருக்கும் மற்றும் சகலபாடிக்கும் தெரியும் என்றால் சரிதான்.

முதல் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் என்ன உறவு முறை என்றால் அம்மா,பிள்ளை. 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் கணவர். இந்த வீட்டு முகவரி என் சகலபாடி கொடுத்தார். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேனா என்றால் படித்து பார்க்கவில்லை, என் வழக்கறிஞர் படித்து கூறியதை கேட்டு கையெழுத்து போட்டேன்.

நான் பதிவு அலுவலகத்திலிருந்து அந்த அடமானப் பத்திரத்தை வாங்கினேனா என்றால் அடமானம் பத்திரத்தை வாங்கவில்லை, அவர்கள் ஆனால் அடமானப் பத்திரம் இல்லை அதை தான் கிரையப் பத்திரம் ஆக வா.சா.ஆ.2 ஆக கொடுத்தார்கள். கிரையம் ஆகி 1 வாரத்தில் கொடுத்தார்கள். அதை நான் பெற்றுக்கொண்டு என் வசம் தான் இருந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை என் வசம் தான் இருந்தது.

இந்த ஆவணம் என் வசம் உள்ளது என்று என் குடும்ப உறுப்பினருக்கும் என் சகலபாடிக்கும் தெரியும். பிரதிவாதிகள் சென்னையில் இருப்பதாலும் நான் அருகில் இருப்பதாலும் என்னை வாங்க சொன்னார்கள் என்றால் சரிதான், சாட்சி சொல்கிறார். அவர்கள் ஆவணத்தை வாங்கி சென்றார்கள் அந்த நகல் தான் நான் வாங்கினேன். வா.சா.ஆ.2 ஐ காட்டி இது நகலா என்று கேட்டால் பிரதிவாதிகள் எழுதியதை வாங்கி சென்றார்கள், எனக்கு ஒரு காப்பி வேண்டுமென்று கேட்டேன் அதற்காக வா.சா.ஆ.2 கொடுத்தார்கள்.

வா.சா.ஆ.2 ஐ அன்றே கொடுத்தார்களா அதன் பிறகு கொடுத்தார்களா 2 மூன்று நாட்கள் கொடுத்தார்கள். அவர் கொடுத்த அந்த பத்திரத்தை பத்திரமாக வைத்திருந்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் உள்ள நிலங்களை தவிர நான் என் அண்ணனிடம் ஏதாவது சொத்துக்களை கிரையம் வாங்கினேனா என்றால் நான் வாங்கி இருக்கிறேன். அதற்கு பணம் கொடுத்து இன்னும் பதிவாகாமல் இருக்கிறது. வா.சா.ஆ.2 1987 லேயே என் அண்ணனுக்கு பணம் கொடுத்தேன் இன்று வரை கிரையம் செய்யவில்லை.

அந்த நிலம் அம்மனாங்குப்பம் ஊரிலேயே உள்ளது. அண்ணனுக்கு உடல்நிலை சரியில்லாததால் கிரையம் பதிவு செய்யவில்லை. 1982 ல் மூலப்பத்திரம் பிரதிவாதிகள் வசம் உள்ளது. அந்த ஆவணத்தை திருப்பி தரக்கோரி இந்த வழக்கில் எதுவும் சொல்லவில்லையென்றால் சரிதான். அசல் பத்திரம் பிரதிவாதி வசம் உள்ளது என்று என் வழக்கில் சொல்லவில்லையென்று சொன்னால் சரிதான். பத்திரத்தை இரத்து செய்யவேண்டும் என்றும் நான் பணத்தை திருப்பி கொடுக்கிறேன் என்றும் மீண்டும் அந்த நிலத்தை பதிவு செய்து தரவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

<u>விசாரணை முடிந்த நேரம்: 12.55 P.M</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.01.23 18:45:21 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.